85

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2784825

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ – மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..............................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/05/68/03/01

දිනය / திகதி / Date } 2011.09. 19

சுற்றறிக்கை இல.: 26 / 2011

சகல மேலதிக செயலாளர்கள்,
பரீட்சை ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்,
பணிப்பாளர் நாயகம் - தேசிய நூலக மற்றும் சுவடிக்கூட சேவைச் சபை,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கல்விக் கல்லூரிகளின் பீடாதிபதிகள்,
சகல ஆசிரிய கல்லூரிகளின் அதிபர்கள்,

**அரச ஊழியர்களுக்காக மிஹின் லங்கா விமான சேவையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சலுகைக் கொடுப்பனவு அடிப்படையிலான விமான டிக்கட் வழங்குதல்**

அரசுக்குச் சொந்தமான விமானக் கம்பனியான வ/ப மிஹின் லங்கா நிறுவனம் அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களில், தம்பதீப சுற்றுலாப் பிரயாணத்தை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ள பக்தர்களுக்காக கொழும்பிலிருந்து தம்பதீப புத்தகயா / பரணஸ் வரையும், அன்னை வேளாங்கண்ணி திருத்தலத்தை தரிசிப்பதற்காக எதிர்பார்த்துள்ள பக்தர்களுக்காக கொழும்பிலிருந்து திருச்சி வரையும் தவணைக் கட்டண அடிப்படையில் விமான டிக்கட் வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

02. கொழும்பிலிருந்து தம்பதீப புத்தகயா / பரணஸ் வரையான டிக்கட்டின் பெறுமதி ரூபா 33,450.00 ஆகவிருப்பதுடன் மாதாந்த தவணைக்கட்டணம் ரூபா 3345.00 ஆகும். முதல் தவணைக் கட்டணம் விமான நிலைய வரியான ரூபா 2200.00 உட்பட ரூபா 5545.00 ஆகும்.

03. கொழும்பிலிருந்து திருச்சி வரையான டிக்கட்டின் பெறுமதி ரூபா 13,500.00 ஆகவிருப்பதுடன் மாதாந்த தவணை ரூபா 2250.00 ஆகும். முதல் தவணைக் கட்டணம் விமான நிலையான வரியான ரூபா 2200.00 உட்பட ரூபா 4450.00 ஆகும்.

04. இது அரச நிறுவனங்களினால் அரச சேவைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் இவ்வாறான இடங்களை தரிசிப்பதற்காக குறுகிய காலத்திற்குள் நாட்டிலிருந்து செல்ல வேண்டியிருப்பதனால் உயர்ந்தபட்ச 10 வேலை நாட்களுக்கு ஊழியர்களுக்குத் தேவையான ஓய்வு விடுமுறைகளிலிருந்து கழிக்கும் அடிப்படையில் நிறுவனப் பொறுப்பாளரின் விருப்பத்திற்கு அமைய அங்கீகாரம் வழங்க முடியும்.

05. இவ்வேலைத்திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களுக்காக வ/ப மிஹின் லங்காவின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் தொலைபேசி இலக்கம் 0773945044 அல்லது 0117800354 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

06. அரச உத்தியோகத்தர்களுக்கு தமது நெருங்கிய உறவினர் அல்லது இருவருக்காக இவ்வடிப்படையில் விமான டிக்கட்டைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் புனித ஸ்தலங்களைத் தரிசித்தல் போன்ற உள்ளக சுற்றுலாக்களைப் பதிவுசெய்ய உள்நாட்டு சுற்றுலா அமைச்சினால் திட்டமிடப்பட வேண்டும்.

07. இவ்வேலைத்திட்டம் தொடர்பாக சகல பணியாளர்களையும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தயவாய் அறியத்தருவதுடன் இவ்வடிப்படையில் டிக்கட் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பவர்களுக்கான விண்ணப்பப்படிவத்தின் மாதிரியும் இணைப்பு I இல் இணைக்கப் பட்டுள்ளதுடன் திணைக்களப் பொறுப்பாளர் ஊடாக முதல் தவணை காசோலையுடன் மிஹின் லங்காவுக்கு அனுப்ப வேண்டிய மாதிரிப் படிவத்தின் பிரதியும் இணைப்பு II இல் இணைக்கப்பட்டுள்ளது.

எச்.எம். குணசேகர,
கல்விச் செயலாளர்.